

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.11.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் ஆவடி, அன்னனூர், கோணாம்பேடு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதல் பள்ளிக் கட்டடங்கள், கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் குளிர்சாதன சேமிப்பு கிடங்குகள், புழல் மேட்டுபாளையத்தில் மேம்படுத்தப்பட்ட கால்பந்து மைதானம் மற்றும் சேத்துப்பட்டில் மேம்படுத்தப்பட்ட சிறிய கால்பந்து மைதானம், என 20.89 கோடி ரூபாய் செலவில் 4 முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (20.11.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழகத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் திருமதி மாலதி லக்ஷ்மன், செந்தில்தாஸ் வேலாயுதம் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை முன்னாள் விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர். முனைவர் கே.வி.சிட்டிபாபு தனது பிறந்த நாளை முன்னிட்டு அண்ணா அறிவாலயத்தில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (20.11.2025) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து, வாழ்த்துப் பெற்றார்.

### நவம்பர் 20, 1916

## நீதிக்கட்சி நிறுவப்பட்ட நாள்!

**நீதிக்கட்சியை நிறுவியவர்கள்**




நீதிக்கட்சி நிறுவப்பட்ட நாள் நீதிக்கட்சி (Justice Party) என்று அறியப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (South Indian Liberal Federation) சென்னை மாகாணத்தில் செயல்பட்ட ஒரு அரசியல் கட்சி டாக்டர் டி. எம். நாயர், பனகல் அரசர், பொப்பிலி அரசர், பி. டி. ராஜன், ஈ.வெ. ராமசாமி மற்றும் தியாகராய செட்டி ஆகியோரால் நிறுவப்பட்ட நாள்.

அரசியலிலும் சமுதாயத்திலும் பிராமணர்களின் ஆதிக்கமே மேலோங்கியிருந்ததை கருதி அதற்கு மாற்றாக பிராமணரல்லாதோருக்காக ஒரு அரசியல் அமைப்பை உருவாக்க நடந்த பல முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்திருந்தன.

நீதிக் கட்சியின் உருவாக்கம் இத்தேவையை நிறைவேற்றியது.

1944ம் ஆண்டு இக்கட்சி கலைக்கப்பட்டது.

**தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும்**

# ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக தமிழ்நாடு போராடும் - வெல்லும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

சென்னை, நவ.21-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**தமிழ்நாட்டின் வளர்ச்சியைத் தடுக்கும் தீய எண்ணமே உருவான ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராகக் கோவையில் திரண்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி!**

**கோவை, மதுரை மாநகரங்களுக்கான மெட்ரோ திட்டம் நிராகரிப்பு,**

**SIR மூலம் வாக்குரிமை பறிப்பு, #Delimitation மூலம் தமிழ்நாட்டின் தொகுதி குறைப்பு,**

**மக்களாட்சி மாண்பை மதிக்காத ஆளுநரின் அடாவடி,**

**நிதி ஒதுக்கீட்டு ஓரவஞ்சனை, உழவர்களுக்கு உதவி மறுப்பு,**

**தமிழ்மொழி மீதான தாக்குதல் & இந்தித் திணிப்பு**

**என அனைத்துக்கும் எதிராகத் #தமிழ்நாடு போராடும்_தமிழ்நாடுவெல்லும்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில்**

# ரூ.20.89 கோடி செலவில் 4 முடிவுற்ற பணிகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, நவ.21-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.11.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் ஆவடி, அன்னனூர், கோணாம்பேடு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் கூடுதல் பள்ளிக் கட்டடங்கள், கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் குளிர்சாதன சேமிப்பு கிடங்குகள், புழல் - மேட்டுபாளையத்தில் மேம்படுத்தப்பட்ட கால்பந்து மைதானம் மற்றும் சேத்துப்பட்டில் மேம்படுத்தப்பட்ட சிறிய கால்பந்து மைதானம், என 20.89 கோடி ரூபாய் செலவில் 4 முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்தார்.

**சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம்**

சென்னைப் பெருநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்கால தேவைகளைக் கருதி பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், அரசின் நகர்ப்புற மேம்பாடு மற்றும் பெருநகரத் திட்டமிடல் தொடர்பான கொள்கை முடிவுகளை செயல்படுத்துதல், முழுமைத் திட்டம் மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்துதல் போன்ற பல்வேறு பணிகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செயல்படுத்தி வருகிறது.

**திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டப் பணிகளின் விவரங்கள்**

ஆவடி, அன்னனூர், கோணாம்பேடு அரசு உயர்நிலை பள்ளிகளில் 10.86 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 20 வகுப்பறைகள், பல்நோக்கு கூடம், அறிவியல் மற்றும் கணினி ஆய்வகங்கள், நூலகம், ஆசிரியர் அறைகள், அலுவலகம், நவீன கழிப்பறை வசதி உள்ளிட்ட பள்ளிக் கட்டடங்கள்;

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் 4.47 கோடி ரூபாய் செலவில், 4,100 சதுர அடியில் கட்டப்பட்டுள்ள பழங்கள், காய்கறிகள் மற்றும் தானியங்களுக்கான 6 குளிர்சாதன சேமிப்பு கிடங்குகள்;

புழல், மேட்டுபாளையம், சீனிவாசன் தெருவில் உள்ள கால்பந்து மைதானத்தில், 4.27 கோடி ரூபாய் செலவில், பார்வையாளர்கள் இருக்கை பகுதி, வீரர்களுக்கான அறை, உடற்பயிற்சி கூடம் மற்றும் நவீன கழிப்பறை வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட கால்பந்து மைதானம்;

சேத்துப்பட்டு, அப்பாசாமி தெருவில் உள்ள சிறிய கால்பந்து மைதானத்தில் 1.29 கோடி ரூபாய் செலவில், பார்வையாளர்கள் இருக்கை பகுதி, வீரர்களுக்கான அறை மற்றும் நவீன கழிப்பறை வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட சிறிய கால்பந்து மைதானம்;

என மொத்தம் 20 கோடியே 89 இலட்சம் ரூபாய் செலவில் 4 முடிவுற்ற திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ.வின் பாட்டனார், காஞ்சி பெரியார், முன்னாள் அமைச்சர், செந்தமிழ்ச்செல்வர் சி.வி.எம்.அண்ணாமலை அவர்களின் 109வது பிறந்தநாளை முன்னிட்டு, நேற்று காஞ்சிபுரம், அவரது இல்லத்தில், அன்னாரின் திருவுருவப் படத்திற்கு, மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மேயர் மகாலட்சுமி யுவராஜ், ஒன்றியச் செயலாளர் பி.எம்.குமார், பகுதி செயலாளர்கள் கே. திலகர், எஸ். சந்துரு, சு.வெங்கடேசன், தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர் எம்.எஸ். சுகுமார், ஒன்றியச் செயலாளர்கள் க. குமணன், பி.எம். பாபு, கழக நிர்வாகிகள் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

## வலைதளங்களில் வைரலாக வலம் வரும் செய்தி!

